ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 1.9 – தாயே தந்தை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

# 1.9 – தாயே தந்தை

‡ தாயே தந்தை என்றும் ⋆
தாரமே கிளை மக்கள் என்றும் ⋆
நோயே பட்டொழிந்தேன் ⋆
உன்னைக் காண்பதோர் ஆசையினால் ⋆
வேய் ஏய் பூம் பொழில் சூழ் ⋆
விரை ஆர் திருவேங்கடவா ! ⋆
நாயேன் வந்தடைந்தேன் ⋆
நல்கி ஆள் என்னைக் கொண்டருளே ॥ **1.9.1** ॥

மான் ஏய் கண் மடவார் ⋆
மயக்கில் பட்டு ⋆
மா நிலத்து நானே நானாவித நரகம் புகும் ⋆
பாவம் செய்தேன் ⋆
தேன் ஏய் பூம் பொழில் சூழ் ⋆
திருவேங்கட மாமலை ⋆
என் ஆனாய் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.2** ॥

கொன்றேன் பல் உயிரைக் ⋆
குறிக்கோள் ஒன்றிலாமையினால் ⋆
என்றேனும் இரந்தார்க்கு ⋆
இனிதாக உரைத்தறியேன் ⋆
குன்றேய் மேகம் அதிர் ⋆

குளிர் மா மலை வேங்கடவா ! ⋆
அன்றே வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.3** ॥

குலம் தான் எத்தனையும் ⋆
பிறந்தே இறந்தெய்த்தொழிந்தேன் ⋆
நலம் தான் ஒன்றும் இலேன் ⋆
நல்லதோர் அறம் செய்தும் இலேன் ⋆
நிலம் தோய் நீள் முகில் சேர் ⋆
நெறியார் திருவேங்கடவா ! ⋆
அலந்தேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.4** ॥

எப் பாவம் பலவும் ⋆
இவையே செய்திளைத்தொழிந்தேன் ⋆
துப்பா ! நின் அடியே ⋆
தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன் ⋆
செப்பார் திண்வரை சூழ் ⋆
திருவேங்கட மாமலை ⋆
என் அப்பா ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.5** ॥

மண் ஆய் நீர் எரி கால் ⋆
மஞ்சுலாவும் ஆகாசமுமாம் ⋆
புண் ஆர் ஆக்கை தன்னுள் ⋆
புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன் ⋆
விண் ஆர் நீள் சிகர ⋆
விரை ஆர் திருவேங்கடவா ! ⋆

அண்ணா ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.6** ‖

தெரியேன் பாலகனாய்ப் ⋆
பல தீமைகள் செய்தும் இட்டேன் ⋆
பெரியேன் ஆயின பின் ⋆
பிறர்க்கே உழைத்தேழை ஆனேன் ⋆
கரி சேர் பூம் பொழில் சூழ் ⋆
கன மா மலை வேங்கடவா ! ⋆
அரியே ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.7** ‖

நோற்றேன் பல் பிறவி ⋆
உன்னைக் காண்பதோர் ஆசையினால் ⋆
ஏற்றேன் இப் பிறப்பே ⋆
இடர் உற்றனன் எம் பெருமான் ! ⋆
கோல் தேன் பாய்ந்தொழுகும் ⋆
குளிர் சோலை சூழ் வேங்கடவா ! ⋆
ஆற்றேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.8** ‖

பற்றேல் ஒன்றும் இலேன் ⋆
பாவமே செய்து பாவி ஆனேன் ⋆
மற்றேல் ஒன்றறியேன் ⋆
மாயனே ! எங்கள் மாதவனே ! ⋆
கல் தேன் பாய்ந்தொழுகும் ⋆
கமலச்சுனை வேங்கடவா ! ⋆

அற்றேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.9** ॥

‡ கண் ஆய் ஏழ் உலகுக்குயிராய ⋆
எம் கார்வண்ணனை ⋆
விண்ணோர் தாம் பரவும் ⋆
பொழில் வேங்கட வேதியனை ⋆
திண் ஆர் மாடங்கள் சூழ் ⋆
திரு மங்கையர் கோன் கலியன் ⋆
பண் ஆர் பாடல் பத்தும் ⋆
பயில்வார்க்கில்லை பாவங்களே ॥ **1.9.10** ॥

அடிவரவு — தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரியேன் நோற்றேன் பற்றேல் கண்ணாய் கண்

தாயே தந்தை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்